<u>பத்திரிக்கை செய்தி</u>

<u>மாநில நலவாழ்வு சங்கம், சென்னை</u>

<u>மற்றும்</u>

<u>பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை</u>

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் செயல்பட்டுவரும் மண்டல பொது சுகாதார பயிற்சி நிலையத்தில் சென்னை மாநில நலவாழ்வு சங்கத்திற்குரிய ஒரு காலிப்பணியிடம் தாய் சேய் நல அலுவலர் (ஒப்பந்த அடிப்படை) **Maternal Child Health Officer (MCHO) (Contract)** பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**விண்ணப்பிக்க கடைசி நாள். ஆகஸ்ட் 20.08.2023 மாலை 5.00 மணி**

மண்டல பொது சுகாதார பயிற்சி நிலையத்தில் தாய் சேய் நல அலுவலர் (ஒப்பந்த அடிப்படை) ஒரு காலிப்பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தாய் சேய் நல அலுவலர் (ஒப்பந்த அடிப்படை) **Maternal Child Health Officer ( MCHO) ( Contract) (One post) :** இப்பணியிடத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட நர்சிங் கல்லூரியில் B.Sc / M.Sc (Nursing) பாடப்பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அதற்குரிய சான்று விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும். இப்பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படை மாத ஊதியம் : ரூ.19,000/- வழங்கப்படும்.

மேற்கண்ட பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது எனவும், வருங்காலங்களில் பணிவரன்முறை செய்யப்படவோ அல்லது எந்த ஒரு காலத்திலும் பணி நிரந்தரம் செய்யப்படவோ மாட்டாது. விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் தங்கள் பெயர், புகைப்படம், பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி மற்றும் முன்அனுவபம் ஆகியவற்றை குறிப்பிட்டு சுய சான்றொப்பமிட்ட நகல்களுடன் நேரிலோ / தபால் மூலமாகவோ சுகாதார அலுவலர், மண்டல பொது சுகாதார பயிற்சி நிலையம், திருவரங்குளம், புதுக்கோட்டை மாவட்டம். **PIN: 622 303** என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க கடைசி நாள். ஆகஸ்ட் 20.08.2023 மாலை 5.00 மணி. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சுகாதார அலுவலர்,
மண்டல பொது சுகாதார பயிற்சி நிலையம்,
திருவரங்குளம், புதுக்கோட்டை மாவட்டம்.